**<u>தேர்வுத் தாள் 1</u>**

**<u>'அ' பிரிவு</u>**

**<u>A1 வேற்றுமை</u>**

**Q1 முதல் Q5 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான வேற்றுமை உருபு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

**(10 மதிப்பெண்கள்)**

Q1. நந்தா தன் ________________________ பேரங்காடிக்குச் சென்றான்.

(1) நண்பனுக்கு
(2) நண்பனை
(3) நண்பனால்
(4) நண்பனோடு

Q2. கரும் மேகத்தை கண்ட மயில் தன் ________________________ விரித்து ஆடியது..

(1) தோகைக்கு
(2) தோகையால்
(3) தோகையை
(4) தோகையுடன்

Q3. மாணவர்கள் ________________________ சென்று புத்தகத்தை இரவல் பெற்றனர்

(1) நூலகத்தை
(2) நூலகத்தின்
(3) நூலகத்திற்கு
(4) நூலகத்திலிருந்து

Q4. கவிதா அறிவிப்புப் ________________________ ஒட்டப்பட்ட அறிவிப்பை வாசித்தாள்.

(1) பலகையின்
(2) பலகையில்
(3) பலகையோடு
(4) பலகையை

Q5. சாந்தி ஆசிரியர் தின பரிசாக ஒரு புத்தகத்தை தமிழ் ________________________ கொடுத்தாள்.

(1) ஆசிரியரிடம்
(2) ஆசிரியரை
(3) ஆசிரியருக்கு
(4) ஆசிரியருடைய

**A2 செய்யுள் / பழமொழி** **(10 மதிப்பெண்கள்)**

**Q6 முதல் Q10 வரையுள்ள செய்யுள்/பழமொழியை நிறைவு செய்வதற்கு ஏற்ற சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

*Q6* தான் ______________ முயலுக்கு மூன்று கால்.

*(1)* அடக்கிய
*(2)* பிடித்த
*(3)* தேடிய
*(4)* பார்த்த

*Q7* ஆகப் பொறுத்தவன் ஆறப் _______ வேண்டும் .

*(1)* பொறுக்க
*(2)* படிக்க
*(3)* பிடிக்க
*(4)* பொழைக்க

*Q8* அழுக்காறு அவாவெகுளி ________ நான்கும்

இழுக்கா இயன்றது அறம்

*(1)* கடுஞ்சொல்

*(2)* அவச்சொல்

*(3)* இன்னாச்சொல்

*(4)* வன்சொல்

*Q9* காலத்தினால் செய்த ________ சிறிதெனினும்

ஞாலத்தின் மாணப் பெரிது.

*(1)* நன்றி

*(2)* நல்லொழுக்கம்

*(3)* பண்பு

*(4)* உதவி

*Q10* மகன்தந்தைக்கு ________ உதவி இவன்தந்தை

என்நோற்றான் கொல்எனுஞ் சொல்

*(1)* ஆற்றும்

*(2)* பணச்செல்வம்

*(3)* கல்விச்செல்வம்

*(4)* அறிவுச்செல்வம்

**A3 அடைமொழி / எச்சம்** **(10 மதிப்பெண்கள்)**

**Q11 முதல் Q15 வரையுள்ள அடைமொழி / எச்சத்தை நிறைவு செய்வதற்கு ஏற்ற பொருத்தமான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

Q11 என் பிறந்தநாளுக்கு என் அத்தை வாங்கித் தந்த பரிசு மிகவும் ____________________ இருந்தது.

(1) அன்பாக

(2) பயனற்றதாக

(3) பயனுள்ளதாக

(4) அரிதாக

Q12 "உன்னுடன் நான் பேச மாட்டேன்" என்று என் தம்பி ______________ கத்தினான்.

(1) அறிவாக

(2) கோபமாக

(3) கண்டிப்பாக

(4) பெரியதாக

Q13 மதி பள்ளிக்கு இரண்டு நாட்கள் செல்லாததால் வீட்டுப்பாடங்கள் ________________ குவிந்திருந்தன.

(1) பாதியாக

(2) நிறைவாக

(3) அதிகமாக

(4) அளவாக

Q14 கண்ணன் தன்னை விட__________ஒருவரை பார்த்து தானும் அவரைப் போல் வளர வேண்டும் என்று ஆசைப்பட்டான்.

(1) கருமையான

(2) அழகான

(3) உயரமான

(4) வட்டமான

Q15 நேற்று என் அத்தை சமைத்தக் கோழிக்கறி____________ இருந்தது.

(1) நன்றாக

(2) கசப்பாக

*(3)* சுவையாக

*(4)* அருமையாக

**<u>A4 முன்னுணர்வுக் கருத்தறிதல்</u>** **(10 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q16 முதல் Q20 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்கு ஏற்ற சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றிலிருந்து <u>ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது</u>.**

அன்று விடுமுறை. வழக்கம்போல்*(Q16)*____________மாலா தன் தாயாருடன் பூங்காவுக்குச் சென்று கொண்டிருந்தாள். தாயார் பின்னால் வர அவள் சற்று முன்னால் நடந்து கொண்டிருந்தாள். அப்போது திடீரென எங்கிருந்தோ வந்த பூச்சாடி சிறுமியின் தோளை உரசிக் கீழே விழுந்து உடைந்தது. மாலா*(Q17)*___________ வலியாலும் பெருங்கூச்சலோடு கீழே மயங்கி விழுந்தாள். அவள் தாயாரும் மற்றவர்களும் அவளை *(18)*____________ ஓடி வர, இன்னும் சிலர் பூச்சாடி வந்த மாடியைக் கண்டுபிடிக்க விரைந்தனர். நல்ல வேளை! அவளது உயிருக்கு *(Q19)*__________ ஏதும் இல்லை. மருத்துவ வண்டி அவளைச் சிகிச்சைக்காக மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றது.

குற்றவாளியைத் தேடிச் சென்றவர்கள் ஓர் ஆடவரைப் பிடித்துக் கொண்டு வந்தார்கள். வீட்டில் நடந்த சண்டையில் கோபம் அடைந்து, சாடியைக் கீழே தூக்கி எறிந்ததாகக் கூறினார் அந்த ஆடவர். எவ்வளவு *Q20*_________செயல் இது! பூச்சாடி தலையில் விழுந்திருந்தால் அந்தச் சிறுமி தனது உயிரை அல்லவா இழந்திருபாள். 'ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு' என்று நிரூபித்த அவனைக் காவலர்கள் விலங்கிட்டு அழைத்துச் செல்ல, கூடியிருந்த கூட்டம் கலைந்தது.

*Q16* *(1)* இன்றும்

*(2)* என்றும்

*(3)* அன்றும்

*(4)* சென்றும்

Q17(1) கோபத்தாலும்

*(2)* தையிரியத்தாலும்

*(3)* அதிர்ச்சியாலும்

*(4)* கவலையாலும்

*Q18* *(1)* பார்க்க

*(2)* தேடி

*(3)* காண

*(4)* நோக்கி

*Q19* *(1)* விபத்து

*(2)* ஆபத்து

*(3)* இடையூறு

*(4)* துன்பம்

*Q20* *(1)* பயந்த

*(2)* குழப்பமான

*(3)* பொறுப்பற்ற

*(4)* சோர்வான

**<u>B5 தெரிவுவிடைக் கருத்தறிதல்</u>** **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் கதையைக் கருத்தூன்றிப் படி.**

மிகவும் வயதான ஒரு பெரும் தொழிலதிபர் மூன்று பிள்ளைகளுக்கும் தம் சொத்துகளைப் பிரித்துக்கொடுத்துவிட்டு, "கடைசி மகன் வாணன் மிகவும் சிறியவன். எனவே, அவன் பெரியவனாகும்வரை அவனது சொத்துகளைப் பாதுகாத்து அவனிடம் கொடுங்கள்", என்று கூறி இறந்துவிட்டார். பேராசை பிடித்த மூத்த சகோதரர்கள் இருவரும் தம்பியின் சொத்தையும் தாங்களே அனுபவித்தனர்.

அவனுக்குப் பதினெட்டு வயதானதும், தன்னுடைய சொத்தைப் பிரித்துத் தரும்படி சகோதரர்களிடம் கேட்டான். ஆனால், அவ்விரண்டு சகோதரர்களோ, "உன்னிடம் சொத்தைப் பாதுகாக்கும் திறன் இருக்கின்றதா என்று நாங்கள் சோதிக்க வேண்டும். அதனால் சில நாள்கள் எங்கேயாவதுபோய் சம்பாதித்துவிட்டு வா," என்று கூறினர். அதற்கு இணங்கிய வாணன் வீட்டைவிட்டு வெளியேறினான்.

அளவு கடந்த பசியால் மயங்கி விழுந்த அவனை ஒரு முதியவர் அழைத்துச் சென்று உணவளித்தார். அவனும் அவரோடு தங்கி வேலை செய்து வந்தான். இவ்வாறு இரண்டு வருடங்கள் கழிந்த பின்னர், தான் செய்து வந்த வேலைக்கான **<u>ஊதியத்தை</u>** வாணன் கேட்டான். "மகனே! உன்னைப்போல் ஒரு நல்ல பையன் எனக்குக் கிடைப்பது அரிது. உன் உழைப்புக்கு நான் நிறைய பணம் கொடுக்க வேண்டும். ஆனால், பணத்தினால் உனக்கு ஆபத்து வரும். ஆகையால், இந்த மூன்று சீதாப்பழங்களை உனக்கு மனமார கொடுக்க விரும்புகிறேன்", என்றார். "ஐயா! எனது அப்பாவைப் போல் இருந்து என்னைப் பாதுகாத்தீர்கள். நீங்கள் பிரியமில்லாமல் கொடுக்கும் பணம் எனக்கு வேண்டாம், ஆசையாகக் கொடுக்கும் இப்பழங்களே போதும்!, என்று கூறிவிட்டுத் தன் சகோதரர்களைக் காணக் கிளம்பினான்.

வாணன் தன் சகோதரர்களிடம் திரும்பி வந்து நடந்ததைக் கூறினான். வாணன் கூறியதைக் கேட்ட அவனுடைய சகோதரர்கள் எரிச்சலடைந்தனர். அவனுடைய சொத்துகளைக் கொடுக்காமல் அவனை வீட்டைவிட்டு விரட்டிவிட்டனர். வீட்டைவிட்டு வெளியேறிய வாணன் கால்போன போக்கில் நடந்து ஒரு மரத்தடியில் அமர்ந்து தன்னை ஆதரிக்க யாரும் இல்லாததை

எண்ணி அழ ஆரம்பித்தான். பசி எடுக்கவே ஒரு சீதாப்பழத்தை எடுத்துச் சாப்பிடத் தொடங்கினான். உடனே, அப்பழம் மிகப் பெரிதாகி அதிலிருந்து தங்கம், வெள்ளி, வைரம் போன்றவை கலகலவென்று கொட்ட ஆரம்பித்தன. திடுக்கிட்ட வாணன் அடுத்த பழத்தைக் கடித்தான். அதுவும் படபடவென்று வளர்ந்து வெடித்தது. அதற்குள் இருந்து அழகிய ரதமும் குதிரையும் வந்தன. மூன்றாவது பழத்தையும் கடித்தான். அதுவும் வளர்ந்து வெடித்து, அதிலிருந்து ராஜகுமாரி வெளிவந்து வாணனின் கரத்தைப் பிடித்தாள். அதன் பின்னர் வாணனும் ராஜகுமாரியும் ஓர் அரண்மனையைக் கட்டிக்கொண்டு அதில் மகிழ்ச்சியாக வாழ்ந்தனர்.

***Q21* முதல் *Q25* வரையுள்ள வினாக்கள் மேற்கண்ட கருத்தறிதல் பகுதியையொட்டி அமைந்துள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.*(8* மதிப்பெண்கள்*)***

*Q21* இறக்கும் தருவாயில் இருந்த தொழிலதிபர் என்ன செய்தார்?

*(1)* தன் மகன்களிடம் சொத்துகளின் விவரம் பற்றி விளக்கிக் கூறினார்.

*(2)* பிள்ளைகளிடம் சொத்துகளை இரு பாகமாகப் பிரித்துக் கொடுத்தார்.

*(3)* சொத்துகளை மூன்று பாகங்களாகப் பிரித்துத் தன் மகன்களிடம் கொடுத்தார்.

*(4)* சொத்து அனைத்தையும் தன் கடைசி மகனுக்கு மட்டும் கொடுத்தார்.

*Q22* மூத்த சகோதரர்கள் ஏன் வாணனை வீட்டைவிட்டு வெளியேற்றினர்?

*(1)* அவன் சொத்துகளை அபகரித்துக்கொள்ள

*(2)* அவனுக்குப் புத்தி புகட்ட

*(3)* அவனைப் பணக்காரனாக்க

*(4)* அவனின் திறமையைச் சோதிக்க

*Q23* வாணன் எப்படிப்பட்டவன் என்று முதியவர் கருதினார்?

*(1)* அவன் பெரிய பணக்காரன் என்று

*(2)* அவன் சிறந்த அறிவாளி என்று

*(3)* அவன் பெரிய ஏமாளி என்று

*(4)* அவன் மிகவும் நல்லவன் என்று

*Q24* வாணன் ஏன் சீதாப்பழங்களே போதும் என்று கூறிச் சென்றான்?

*(1)* முதியவர் பழங்களை அன்போடு கொடுத்ததால்

*(2)* பழங்கள் உடலுக்கு நல்லது என்பதால்

*(3)* சகோதரர்கள் பிடுங்கிக்கொள்வார்கள் என்பதால்

*(4)* முதியவரிடம் பணம் இல்லாததால்

**சொற்பொருள்** **(2 மதிப்பெண்கள்)**

**வினா Q25 இடம் பெற்றுள்ள சொல்லின் பொருளை உணர்த்தும் சரியான சொல்லைக் கொடுக்கப்பட்டிருக்கும் சொற்களிலிருந்து தேர்ந்தெடு.**

Q25 ஊதியத்தை (1) பணத்தை

*(2)* சம்பளத்தை

*(3)* மதிப்பை

*(4)* சொத்தை

**<u>ஆ” பிரிவு</u>**

**<u>C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள்</u>** **(8 மதிப்பெண்கள்)**

**பின்வரும் பகுதியில் Q26 முதல் Q29 வரையுள்ள கோடிட்ட இடங்களை நிரப்புவதற்குப் பொருத்தமான ஒலி வேறுபாட்டுச் சொற்கள் இப்பகுதியின் அடியில் கொடுக்கப்பட்டுள்ளன .அவற்றிலிருந்து ஒவ்வொரு கோடிட்ட இடத்தையும் நிரப்புவதற்கு ஏற்ற <u>மிகச் சரியான விடையைத் தேர்ந்தெடுத்து அதன் எண்ணை அடைப்புக்குறிக்குள் எழுது</u> .**

*Q26* தேவன் பழச்சாறு குடித்தான். அது அவனுடைய தாகத்தை ____________.

*Q27* கொக்கின் ___________ உறுதியானது. அது மீன்களை கொத்தி உண்ண உதவும்.

*Q28* அத்தை புதிய வீடு வாங்கினார். அதில் நான்கு ____________ உள்ளன.

*Q29* நான் ஒரு சொல்லின் பொருளை ___________ வேண்டும். ஆனால், எனது அகராதியைக் காணவில்லை.


| | | | |
|---|---|---|---|
| *(1)* | தணித்தது | *(2)* | அலகு |
| *(3)* | அரிய | *(4)* | அறைகள் |
| *(5)* | அழகு | *(6)* | அறிய |
| *(7)* | அரைகள் | *(8)* | தனித்தது |

D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல் (10 மதிப்பெண்கள் )

பின்வரும் விளம்பரத்தை கருத்தூன்றிப் படி

## சிவாலயா இசை மற்றும் நடனப் பள்ளி

110 சிராங்கூன் சாலைசிங்கப்பூர் 324110





**பள்ளிச் சிறார்களுக்கு சிறப்பு சலுகை**

ஜூன் 25-ஆம் தேதிக்குள் பதிவு செய்வோருக்கு 10% கழிவுவழங்கப்படும்.

மேல்விவரங்களுக்கு

www.sivalaya.com.sgஅல்லது

95959776/ 81184625 என்ற எண்ணுடன் தொடர்பு கொள்ளவும்

**சேவைகள்**

சங்கீதம் (வாய்பாட்டு), வீணை மீட்டுதல் மற்றும் மிருதங்கம் வாசித்தல்

பரதநாட்டியம்,
மோகினிஆட்டம்,
நாட்டுப்புறநடனம் மற்றும்
மேற்கத்தியநடனம்

வெள்ளிக்கிழமை மாலை, சனிக்கிழமை மற்றும் ஞாயிற்றுக்கிழமை காலை நேரங்களில் வகுப்புகள் நடைபெறும்

பதிவு செய்த ஒரே வாரத்தில் வகுப்பில்
சேர்ந்து கொள்ளலாம்

Q30 **முதல்** Q33 **வரை இடம்பெற்றுள்ள வினாக்கள் முன்பக்கத்தில் தரப்பட்டுள்ள விளம்பரத்தை அடிப்படையாகக்கொண்டு அமைந்து உள்ளன. ஒவ்வொரு வினாவிற்கும் உரிய மிகப் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடு.**

*30* என்னென்ன சேவைகளைக் சிவாலயா இசை மற்றும் நடனப் பள்ளி வழங்குகிறது?

1. மேற்கத்திய நடனம் மற்றும் சங்கீத வகுப்பு
2. பரதநாட்டியம் மற்றும் பியானோ வகுப்பு
3. நாட்டுப்புற பாடல் மற்றும் மேற்கத்திய நடன வகுப்பு
4. மோகினியாட்டம் மற்றும் தப்லா வகுப்பு

*31.* யாருக்கு *10%* சலுகை வழங்கப்படும்?

1. பதிவு செய்துகொள்ளும் பள்ளி சிறார்களுக்கு
2. ஜூன் மாதக் கடைசிக்குள் பதிவுசெய்யும் சிறார்களுக்கு
3. பாலர் பள்ளியில் பயிலும் சிறார்களுக்கு
4. விடுமுறை காலத்தில் பதிவு செய்யும் பள்ளி சிறார்களுக்கு

*32.* வகுப்புகள் வாரத்தில் எத்தனை நாட்கள் நடைபெறும்?

1. மூன்று நாட்கள்
2. நான்கு நாட்கள்
3. இரண்டு நாட்கள்
4. ஐந்து நாட்கள்

*Q33* சிவாலயா நடனப்பள்ளியில் எந்த வகை நடனங்கள் மட்டும் கற்றுக்கொள்ளலாம் ?

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

______________________________________________________________________

________________________________________

***D8* <u>சுயவிடைக் கருத்தறிதல்</u>**

**பின்வரும் கட்டுரைப் பகுதியைக் கருத்தூன்றிப் படி.**

வளவன் தன்னுடைய பத்தாம் வயதில் இருக்கும்போது அவனுடைய தந்தை இறந்து போனார். அவனுக்கு வயதான தாயும் தம்பியும் இருந்தனர். ஆனால், அந்தக் குடும்பத்தைக் காப்பாற்றுவதற்கு யாரும் இல்லை. எனவே, வளவன் தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றும் பொறுப்பை ஏற்றுக்கொண்டான்.

ஆனால் வளவன் சிறிதும் அஞ்சாமல் நாள்தோறும் காட்டிற்குச் சென்று விலங்குகளை வேட்டையாடிக் கொன்றான்; மீ¢ன்களைப் பிடித்தான். அவற்றைத் தன் வண்டியில் ஏற்றிக் கொண்டான். அவனுடைய வண்டியை நாய்கள் வீட்டுக்கு இழுத்துக்கொண்டு வந்தன.

ஒரு சமயம் வளவன் வாழ்ந்த ஊரில் கொடிய பஞ்சம் ஏற்பட்டது. அவனது குடும்பத்தார் உண்ண உணவு இல்லாமல் துன்பம் அடைந்தனர். அந்த நேரத்தில் வளவனுடைய அம்மா கடுமையான காய்ச்சலால், படுத்த படுக்கையானார். அவனுடைய நாய்களும் ஒவ்வொன்றாக இறந்தன. இறுதியில் இரண்டு நாய்களே மீதம் இருந்தன. அதனால் வளவனது மனம் கவலையும் சோர்வும் அடைந்தது. ஆனாலும், அவன் சிறிதும் துணிவை இழந்துவிடவில்லை.

நாளடைவில் அந்த வளவனுடைய அம்மாவின் உடல் மெலிந்து மோசமானது. அதைக் கண்ட வளவன், தம் தந்தையை இழந்ததைப்போலத் தாயையும் இழந்து விடுவேனோ என்று எண்ணி அச்சம் அடைந்தான். அந்த

ஊரில் மருத்துவரும் இல்லை. வெகுதூரத்திலுள்ள ஊருக்குச் சென்றால் தான் மருத்துவரைக் காணலாம். எப்படியாவது அந்த ஊருக்குத் தாயை அழைத்துச் செல்ல வேண்டும் என்று முடிவு செய்தான். ஒருநாள், நோயுற்ற தாயையும் தம்பியையும் வண்டியில் ஏற்றினான். மெலிவுற்ற நாய்களை வண்டியில் பூட்டினான். நாய்களோடு சேர்ந்து வண்டியை இழுத்துக்கொண்டு புறப்பட்டான். அவர்கள் மலைகளையும் மேடுகளையும் பள்ளங்களையும் கடந்து சென்றனர்.

அவர்கள் வாரக் கணக்கில் பயணம் செய்து இறுதியாக அந்த ஊரைச் சென்றடைந்தனர். உணவு இல்லாமல் களைப்புற்றுச் சென்ற அவர்களைக் கண்ட அந்த ஊர்மக்கள் இரக்கம் கொண்டு உணவும் உடையும் கொடுத்து, மருத்துவ உதவியும் கிடைக்கச் செய்தார்கள். அருமை அம்மா நோய் நீங்கி உயிர் பிழைத்ததைக் கண்டு வளவன் களிப்பு அடைந்தான். அவர்களுக்கு உதவி செய்த அந்த ஊர் மக்கள் வளவனை தாயின் நலம் பேணிய புதல்வன் என்று பாராட்டினார்கள்.

**கேள்விகள்**

34) வளவன் குடும்பப் பொறுப்பை ஏன் ஏற்றுக்கொண்டான்?

(3 மதிப்பெண்கள்)

____________________________________________

____________________________________________

____________________________________________

____________________________________________

*35)* வளவனின் குடும்பத்தினர் உண்ண உணவு இல்லாமல் துன்பம் அடைந்ததற்கு காரணம் என்ன *? ( 3* மதிப்பெண்கள் *)*

*36)* வளவனின் மனம் ஏன் வருத்தமும் சோர்வும் அடைந்தது *?*

*( 3* மதிப்பெண்கள் *)*

*37)* வளவன் மருத்துவரை எங்கே சென்று காணலாம் என்று முடிவு செய்தான் *? ( 3* மதிப்பெண்கள் *)*

*38)* வளவன் வெகு தூரத்தில் உள்ள ஊரைச் சென்று அடைவதற்கு எவற்றை எல்லாம் கடந்து செல்ல வேண்டி இருந்தது *? ( 3* ம *)*

______________________________

______________________________

______________________________

______________________________

*39)* அந்த ஊர்மக்கள் வளவனுக்கும் அவனுடைய குடும்பத்தினருக்கும் என்ன உதவிகளை செய்தனர் *? ( 4* ம *)*

______________________________

______________________________

______________________________

______________________________

*40)* இந்தக் கதையில் வளவன் தன்னுடைய அம்மாவை இழந்து விடக் கூடாது என்பதற்காக என்னவெல்லாம் செய்தான் என்பதை பற்றி உன் நண்பனுக்குக் குறிப்பு எழுது.

அன்புள்ள நண்பனுக்கு,

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

______________________________

இப்படிக்கு,____________________